# தகமை அறிதல் பரிசோதனை

«ஒரு மறைந்திருக்கும் இனவெறி போன்ற தன்மையை நான் உணர்கிறேன். ஒருவருக்கு மொழி தெரியாவிட்டாலோ அல்லது வித்தியாசமாகக் கதைத்தாலோ மேமெழுந்த வாரியாக அவருக்கு யோசிக்கத் தெரியவில்லை எனப் பல மக்கள் எண்ணுகின்றனர். » **Rachad Kanawati, சிரியா**

«உனக்கு கட்டாயம் மொழி தெரிய வேண்டும், இல்லையென்றால் எதுவும் உதவப்போவதில்லை. அதை எவரும் உனக்குப் பரிசாகத் தர முடியாது. ஆனால் அதை நீ கற்றுக்கொள்ள முடியும். அதிகம் வாசிப்பதுடன் அதிகம் பிற மக்களுடன் கதைக்க வேண்டும்.» **Preethy Vaddakkadath, இந்தியா**

## மொழி – தகமை அறிதல் பரிசோதனைக்கான திறப்பு

உகந்தது என்ற சோதனை அனைவருக்கும் ஒரேமாதிரியாக இருக்கும், நீங்கள் சுவிசில் பாடசாலை சென்றிருக்கலாம் அல்லது 2, 3 வருடங்கள் இங்கு வாழ்ந்திருக்கலாம், எப்படியிருப்பினும் பரவாயில்லை.

தகமை அறிதல் பரிசோதனையானது, நீங்கள் நன்றாக டொச் தெரிந்துள்ளீர்களா என்பதை அறிய முனைகிறது. அத்துடன் ஒவ்வொரு பாடத்திற்கும் உங்களுக்கு நல்ல மொழியறிவு இருத்தல் வேண்டும், விடையளிப்பதற்கு முன்பாக நீங்கள் கேள்விகளை விளங்கிக்கொள்ள வேண்டும்.

உதாரணமாக:

### மூன்றடுக்கு

2 தோட்டக்காரரும் 1 தோட்டக்காரியும் ஒரு துண்டு நிலத்தை உழுவதற்கு 4 நாட்கள் தேவைப்படுகின்றது. இரண்டு மடங்கான வேலையாட்கள் அந்த நிலைத்தை உழுவதற்கு எவ்வளவு காலம் தேவைப்படும்?

விடை: 2 நாட்கள்


### அடிப்படைக் கணக்கு

சொன்யா மற்றும் லறிசா தமது வங்கிக் கணக்கை ஒப்பிடுகின்றனர். சொன்யாவின் வங்கிக் கணக்கில் லறிசாவின் கணக்கிலும் விட 1'394 பிராங் குறைவாக உள்ளது. லறிசாவின் கணக்கில் 9'341 பிராங் உள்ளது. சொன்யாவின் வங்கிக் கணக்கில் எவ்வளவு உள்ளது?

விடை: 7'947 பிராங்

### அடிப்படையாக மற்றும் தர்க்கரீதியாகக் கணித்தல்

நீங்கள் தொடருந்தில் A விலிருந்து (சிவப்புப் புள்ளி) B க்கு (நீலப்புள்ளி) செல்கின்றீர்கள். நீங்கள் தரிப்பிடத்திற்கு இடையில் உள்ள ஒவ்வொரு பாதைத் துண்டுக்கும் 1 பிராங் 80 சதம் பணம் செலுத்துகின்றீர்கள் எந்தப் பாதையை நீங்கள் தெரிவுசெய்வீர்கள் மற்றும் உங்களது பயணச்சீட்டுக்கான கட்டணம் எவ்வளவு?



விடை: வேகமான பாதை 2 பகுதித் துண்டுகளுக்கு ஊடாகச் செல்கின்றது. பயணச்சீட்டு 3 பிராங் 60 சதம்.

### எண்களை ஒப்பிடுதல்

கீழுள்ள எண்களில் முதல் இலக்கம் ஒற்றைப்படையாகவும் இரண்டாவது இலக்கம் இரட்டைப்படை இலக்கமாகவும் வரும் எண்களைக் குறிப்பிடுங்கள்.

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 32 | 23 | 44 | 51 | 62 | 74 | 80 | 15 | 92 | 14 | 27 | 18 |
| விடை: | 32 | 23 | 44 | 51 | 62 | 74 | 80 | 15 | 92 | 14 | 27 | 18 |

*மேலதிக செய்முறைகளை இங்கே காணலாம் www.sixpack-comic.ch/testncheck.*

## மொழி

நீங்கள் செய்முறைகளுக்கு விடையளிப்பதற்கு மொழியை விளங்கிக்கொள்ள வேண்டும். வசனச் செய்முறைகள் மேலும் கடினமானவையாக இருக்கும். இங்கு நீங்கள் எவ்வளவு சிறப்பாக மொழியை விளங்கிக் கொள்கின்றீர்கள் என்பதை மட்டும் அளவிடாமல் எவ்வளவு சிறப்பாக தீர்த்துக் கொள்கின்றீர்கள் என்று பார்க்கப்படும்.

### வெற்றிடங்களை நிரப்புக

பொருத்தமான சொற்களை அல்லது சரியான இறுதி எழுத்துக்களை ஒவ்வொரு பெட்டியிலும் இடவும்.

நீங்கள் உங்களுக்காக ............ தொழிற்கல்விக்கு விண்ணப்பிக்க விரும்பினால், அதற்கு நீங்கள் ஒரு முழுமையான விண்ணப்பக் கோவையை -----------. இந்த விண்ணப்பக் கோவையில் ---------------- எழுத்து வடிவமான விண்ணப்பம், வாழ்க்கைச் சரிதம், இறுதி மூன்று வருடச் சான்றிதழ்கள், பயிற்சி-அறிக்கை மற்றும் உகந்ததா என்ற சோதனை முடிவுகள். பல நிறுவனங்கள் ............ முழுமையானதாக உள்ளதா ............ முதல் தெரிவை மேற்கொள்கின்றன. முக்கிய பத்திரங்கள் இல்லாதிருந்தால் இதற்குப் பொறுப்பானவர்கள் ஒரு நிராகரிப்பை ............. அல்லது –அவர்கள் அன்பானவர்களாக இருந்தால்- தவறி .................. பத்திரங்களை மீளச் சமர்ப்பிக்குமாறு ............ கொள்வார்கள்.

சரியான விடை (இந்த அப்பியாசத்தில், சில வெற்றிடங்களில் வேறு சொற்களும் சரியாக அமையலாம்)

நீங்கள் உங்களுக்காக ஒரு தொழிற்கல்விக்கு விண்ணப்பிக்க விரும்பினால், அதற்கு நீங்கள் ஒரு முழுமையான விண்ணப்பக் கோவையை அனுப்பவேண்டும். இந்த விண்ணப்பக் கோவையில் இருக்கவேண்டியது, எழுத்து வடிவமான விண்ணப்பம், வாழ்க்கைச் சரிதம், இறுதி மூன்று வருடச் சான்றிதழ்கள், பயிற்சி-அறிக்கை மற்றும் உகந்ததா என்ற சோதனை முடிவுகள். பல நிறுவனங்கள் விண்ணப்பக்கோவை முழுமையானதாக உள்ளதா என்பதை வைத்தே முதல் தெரிவை மேற்கொள்கின்றன. முக்கிய பத்திரங்கள் இல்லாதிருந்தால் இதற்குப் பொறுப்பானவர்கள் ஒரு நிராகரிப்பை அனுப்புவார்கள் அல்லது -அவர்கள் நட்பானவர்களாக இருந்தால்- தவறி உள்ள பத்திரங்களை மீளச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்வார்கள்.

### வசனம் அமைத்தல்

அனைத்துச் சொற்களும் வரக்கூடிய விதத்தில் நீங்கள் முழுமையான வசனத்தை ஏற்படுத்துங்கள்.

விரைவில் - விண்ணப்பக் கோவையில் - நாங்கள் - இல்லாதிருக்கும் - தயவாக - படிவத்தை - உங்களது - இயலுமான - அனுப்புமாறு - கேட்டுக் கொள்கிறோம்.

விடை: உங்களது விண்ணப்பக் கோவையில் இல்லாதிருக்கும் படிவத்தை இயலுமான விரைவில் அனுப்புமாறு நாங்கள் தயவாக கேட்டுக் கொள்கிறோம்.

பாடசாலை வருட - இல்லாதுள்ளது - என்ன - மூன்று - இறுதி - நான் - என்னிடம் - சான்றிதழ்கள் - வேண்டும் - செய்ய?

விடை: இறுதி மூன்று பாடசாலை வருட சான்றிதழ்கள் என்னிடம் இல்லாதுள்ளது, நான் என்ன செய்ய வேண்டும் ?

என்பதை - இதுவரை - தொழில் - ஒரு - விளக்குங்கள் - ஏன் - விண்ணப்ப - விளக்குங்கள் - மேற்கொள்ளவில்லை - நீங்கள் - செய்துபார்தல பயிற்சியை !

விடை: ஏன் நீங்கள் இதுவரை ஒரு தொழில் செய்துபார்த்தல் பயிற்சியை மேற்கொள்ளவில்லை என்பதை விண்ணப்ப படிவத்தில் விளக்குங்கள்!

## எந்தச் சொற்கள் இந்தவரிசையில் பொருத்தமற்றதாக உள்ளது?

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வரி 1: | ஓடுதல் | நடத்தல் | பறத்தல் | நடைபோடுதல் | அணிவகுத்து நடத்தல் |
| வரி 2: | பால | றோசா | அரச | வேம்பு | தேக்கு |
| வரி 3: | ஆலோசனையற்ற | | நட்பான | பண்பான | அன்பான வியக்கத்தக்க |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வரி 1: | ஓடுதல் | நடத்தல் | பறத்தல் | நடைபோடுதல் | அணிவகுத்து நடத்தல் |
| வரி 2: | பால | றோசா | அரச | வேம்பு | தேக்கு |
| வரி 3: | ஆலோசனையற்ற | | நட்பான | பண்பான | அன்பான வியக்கத்தக்க |

## பந்தியை விளங்கிக்கொள்ளல்

மீர்யத்திற்கு நிச்சயமற்றதன்மை உள்ளது. ஒருசில நாட்களுக்கு முன்பாக பெரும் நம்பிக்கையுடன் விண்ணப்பக் கோவை அவவால் அனுப்பிவைக்கப்பட்டது. இது கிடைக்குமானால் இதுவே அவவின் கனவுத் தொழிற்கல்வியாகும். இந்த வேலைக்குத் தான் மிகவும் உகந்தவ என்பதும் அவவுக்குத் தெரிந்திருந்தது. அத்துடன் அவ மிகவும் அக்கறை எடுத்திருந்தா, அவ அதிகம் தேடியிருந்ததுடன், நிறுவனங்கள் குறித்து அதிகம் அறிந்திருந்தா. அவ தனது அனைத்துச் சான்றிதழ்களையும் பதிவு செய்ததுடன் முழுவதையும் இலத்திரனியல் மூலமாக நிறுவனத்திற்கு அனுப்பியிருந்தா. இப்போது இப்படி வந்துள்ளது! சிறு மின்னஞ்சல் மறுமொழியில்: «நாங்கள் பல விண்ணப்பங்களைப் பெற்றுள்ளோம் ஆகவே சற்றுப் பொறுமையுடன் இருக்குமாறு தயவாகக் கேட்டுக்கொள்கின்றோம். »

☐ மீர்யத்திற்கு ஒரு நிராகரிப்பு வந்துள்ளது

☐ மீர்யத்திற்கு பல ஆண் பெண் போட்டியாளர்கள் உள்ளனர்

☐ மீர்யம் தொழிற்கல்வி இடத்தைப் பெற்றுள்ளா.

☐ மீர்யம் தனது வாழ்க்கைச் சரிதத்தை சேர்த்து அனுப்ப மறந்துள்ளா.

☒ மீர்யத்திற்கு பல ஆண் பெண் போட்டியாளர்கள் உள்ளனர்

## பந்தியாக எழுதுததல்

நீங்கள் ஒரு விண்ணப்பப் படிவத்தை இணையம் மூலமாக அனுப்பவேண்டும். அத்துடன் இணைப்பாக ஒரு கடிதம் எழுதுங்கள். எவ்வாறு நீங்கள் எழுதவேண்டும் என்பதற்கு இரண்டு விடைகள் தரப்படுகின்றது:

- ☐ மிகவும் மதிப்பிற்குரிய திருமதி Kuhn
  நீங்கள் எனக்காகத் தொலைபேசியில் நேரம் ஒதுக்கியதற்கு நான் நன்றி கூறுகிறேன். இத்தால் எனது விண்ணப்பப் படிவங்களை பணிவுடன் உங்களுக்கு அனுப்பிவைக்கிறேன்.
  உங்கள் பதிலால் நான் மகிழ்வடைவேன்.
  அன்பு வாழ்த்துக்களுடன்
  xxx
- ☐ மிகவும் மதிப்பிற்குரிய பெண்களே மற்றும் ஆண்களே,
  இத்தால் தொழிற்கல்விக்கான உங்களது வெற்றிடத்தை நான் www.berufsberatung.ch இல் கண்டுகொண்டதுடன் எனது விண்ணப்பக்கோவையை உங்களுக்கு அனுப்பிவைக்கிறேன். நீங்கள் என்னை நேரடியாகக் கண்டறிந்து கொள்ள விரும்பினால் மற்றும் ஒரு நேர்முகப்பரீட்சைக்கு அழைத்தால் நான் மிகவும் மகிழ்வடைவேன்.
  அன்பு வாழ்த்துக்களுடன்
  xxx

முதலாவது விடை சிறந்தது.

## சொற்தொடர்

கீழுள்ள வார்த்தைச் சோடிகளை நீங்கள் பாருங்கள்.

எந்த இரண்டு சொற்கள் ஒரே அர்த்தம் கொண்டவை? → a

எந்த இரண்டு சொற்கள் எதிர் அர்த்தம் கொண்டவை? → b

எந்த இரண்டு சொற்கள் வித்தியாசமான அர்த்தம் கொண்டவை? → c

| | | |
|---|---|---|
| □ | நாளாந்தம் | வழமையான |
| □ | துணிவு | பயம் |
| □ | குருவி | ஊசியிலை மரம் |
| □ | கிரகித்தலான | பகிடியாக |
| □ | திடகாத்திரமான | உரையாடலான |
| □ | விரைவாக | கடுகதியாக |

| | | |
|---|---|---|
| a | நாளாந்தம் | வழமையான |
| b | துணிவு | பயம் |
| c | குருவி | ஊசியிலை மரம் |
| b | கிரகித்தலான | பகிடியாக |
| c | திடகாத்திரமான | உரையாடலான |
| a | விரைவாக | கடுகதியாக |

இடதுபக்கச் சோடி காண்பிப்பது போன்று எந்தச் சொல்லை வலது பக்கச் சோடியாக நிரப்ப வேண்டும்?

| | | | |
|---|---|---|---|
| கால் | காலுறை | கழுத்து | _______________ |
| பாண் | பாண்செய்பவர் | இறைச்சி | _______________ |
| கொள்ளு | குதிரை | பெற்றோல் | _______________ |
| மிதிவண்டி | மணி | பொலிஸ்வாகனம் | _______________ |
| வாழை | பழம் | கரட் | _______________ |

| | | | |
|---|---|---|---|
| கால் | காலுறை | கழுத்து | கழுத்துத் துணி |
| பாண் | பாண்செய்பவர் | இறைச்சி | இறைச்சி வெட்டுபவர் |
| கொள்ளு | குதிரை | பெற்றோல் | சிற்றூர்தி |
| மிதிவண்டி | மணி | பொலிஸ்வாகனம் | அபாயஒலி |
| வாழை | பழம் | கரட் | மரக்கறி |